REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✶ The Official Organ Of The D.P.F.

மலர் 2] சென்னை: சித்திரை 27உ செவ்வாய் (10—5—55) ★ ★ வெளியீடு: சித்திரை 28உ புதன் (11—5—55) [இதழ் 281

ஏட்டுச் சுரைக்காய்தானே ?

"காங்கிரஸ் தீவிரவாதிகள் எந்த வகுப்பு நிறுவனத்திலும் உறுப்பினர்களாக இருக்கக்கூடாது; வகுப்பு அல்லது சாதி சம்பந்தமான விருந்துகளில் அவர்கள் கலந்து கொள்ளக்கூடாது; அவர்கள் கலப்புத் திருமணங்களுக்கு ஊக்கந்தர வேண்டும்; இது போலவே, மத்திய சர்க்காரும், மாநில சர்க்கார்களும் வகுப்பு அல்லது சாதி சம்பந்தமான நிறுவனங்களுக்கு எவ்வித மானியம் தருவதையும் நிறுத்திக்கொள்ள வேண்டும்."

இவ்வாறு, காங்கிரஸ் கட்சியைப் பலப்படுத்தவும், தூய்மையாக்கவும் காங்கிரஸ் செயற் குழுவினரால் நியமிக்கப்பட்ட நிரந்தரக் குழு தனது சிபாரிசுகளை அறிக்கை ஒன்றின் மூலம் வெளியிட்டிருக்கிறது.

நிலப் பிரபுத்துவம் தொலைக்கப்பட்டாலும்!

இரஜபுத்திர இரணகளச் சூரர்களின் பெண்ணடிமைப் பித்து!

போபாலில் அதன் தீமைகள் தொடருகின்றன!

போபால், மே 10—

போபால் மாநிலத்தில் உள்ள 'ஜாகிர்தார்'கள் எனப்படும் சிறு நிலப் பிரபுக்கள், தங்களின் கோட்டைகளுக்குள் ஏராளமான அடிமைப் பெண்களை வைத்திருக்கிறார்களாம். இதுபற்றி போலீசார் புலன் விசாரணை செய்கிறார்கள் என்று தெரிகிறது.

இந்தப் பெண்கள், 'மானக்ஸ்' என்று அழைக்கப்படுகிறார்களாம். பிரபுத்துவ முறையின் கொடுமைகளுள் ஒன்றான இந்த அடிமை முறையினால், ஏராளமான பெண்களின் வாழ்வு குறிப்பிட்ட சில ஜாகீர்தார்களின் கையில் இருக்கிறது.

இந்த ஜாகீர்தார்களின் தலைமை நிலையம் நசீராபாதில் இருக்கிறது. மலைக் குன்றுகளின் மீது கட்டப்பட்ட ஒன்பது கோட்டைகளே இந்த நகரம்.

இக்கோட்டைகளுக்குள் இருக்கும் பெண்கள், ஜாகீர்தார்களுக்கான ஊழியம் அனைத்தையும் செய்யும் கீழ்த்தர சிப்பந்திகளாம் இப்பெண்களின் கணவன்மார்களுக்கு 'பிலேதார்' என்று பெயராம். இவர்களுக்கு, குதிரை இலாயங்களைப் பாதுகாப்பதும், எஜமானர்களின் குதிரைகளைப் பாதுகாப்பதும் வேலையாகும்

ஆண்டில் கால்பகுதி நாட்களில் இந்தக் கோட்டை இருக்குமிடத்திற்கு யாருமே செல்ல முடியாதாம்; கடும் மழைதான் இதற்குக் காரணமாம்!

இங்கே உள்ள அடிமைப் பெண்களின் இழிநிலைமையைக் கண்டு லட்சுமி நாராயணன் என்ற சமூக ஊழியர் ஒருவர், இரண்டு அடிமைப் பெண்களை விடுதலை செய்யுமாறு போபால் கமிஷனருக்கு மனுச் செய்திருந்தாராம்.

ஜீதாபாய் என்ற அடிமைப் பெண், நான்கு வயதாக இருக்கும் போது, தனது விதவைத் தாயுடன் ஒரு ஜாகீர்தாருக்கு மற்றொரு ஜகீர்தாரினால் 'வரதட்சிணை'ப் பொருளாகக் கொடுக்கப்பட்டிருக்கிறார். 15 ஆண்டுகளுக்கு முன்னர் கொடுக்கப்பட்ட இப்பெண்ணுக்கு, பின்னர் கோட்டைக்குள் ஒரு 'பிலேதாரு'டன் திருமணம் செய்யப்பட்டதாம்; ஆனால், அப்பெண், தனது கணவனுடன் வாழ அனுமதிக்கப்படவில்லையாம்.

வேதனையுடன் வாழ்க்கையில் வெறுப்புற்ற அப்பெண், கோட்டையிலிருந்து வெளியில் தப்பிச் செல்ல முயன்றதாகவும், ஆனால் பிடிபட்டு, அடித்து அழிக்கப்பட்டதாகவும் தெரிகிறது.

பொருத்தமான பெயர்தான்!

பாட்டியாலா, மே 9—

தாலி கட்டிய மனைவியையே மணமாகாத தனது தங்கை என்று கூறி, அப்பெண்மணியை மணஞ் செய்துகொடுப்பதாகக் கூறி இங்குள்ள ஒரு வக்கீல் குமாஸ்தாவிடம் பணம் பறித்ததாக ஒரு 'ஆசாமி' மீது பட்டிண்டா மாவட்ட நீதி மன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கு ஒன்றில் தெரிய வந்திருக்கிறது.

அந்த 'ஆசாமி'யின் பெயர் ஜெயராம் என்றும், அப் பெண்மணியின் பெயர் திரௌபதி (!) என்றும் கூறப்படுகிறது. அவர்கள் இருவரும் ஜாமீனில் விடுதலை செய்யப்பட்டுள்ளனராம்.

லக்னோவில் 'சதி யக்ஞம்'!

'பாத பூசை' செய்து பாவையர் வணங்கினர்

கோமதி நதிக் கரையில் கோலாகலக் காட்சி?

லக்னோ, மே 8—

கோமதி நதிக்கரையில் இன்று நூற்றுக்கு மேற்பட்ட பெண்கள (மனைவிமார்கள்) கூடி தங்களின கணவர்களை வணங்கினர்கள் என்று தெரிகிறது.

இந்தப் 'பதி பூசை', சேவ்ஜி என்ற சாமியாரின் வேண்டுகோளின்பேரில் நடைபெற்றதாம்!

'கௌரீஸ்வரர் பதி பூஜை' என்று இந்த நிகழ்ச்சி அழைக்கப்படுகிறதாம்!

சிவபெருமானின் மனைவியான கௌரி தேவி என்னும் 'கடவுட் சிலை'யை இப்பெண்மணிகள் வணங்கினார்களாம்!

இச்சிலை வணக்கத்திற்குப் பின்னர், மனைவிமார்கள் அனைவரும் தங்கள் கணவன்மார்களை தொழுது அவர்களது கால்களைக் கழுவி பூசித்தார்களாம்!

இந்தப் பதி பூசைக்கு, காசியிலிருந்து வந்திருந்த பண்டிதர் ஒருவர் தலைமை தாங்கினாராம்!

"கணவனே! நீதான் பிரம்மா! நீயே விஷ்ணு! நீயே மகேஸ்வரன்; நான் ஏதாவது தவறு செய்திருந்தால் என்னை தயவு செய்து மன்னித்துவிடு!" என்ற சுலோகம் ஒன்றை அந்தப் பண்டிதர் படித்தாராம்!.

இது போன்ற பதி பூஜையின் நோக்கத்தை விளக்குகையில், சேவ்ஜி, பெண்களுக்குப் பிறக்கும் குழந்தைகள், காமத்தின்பால் பிறக்காமல் காதலின்பால் பிறந்த வீரர்களாகத் திகழ வேண்டுமென்பதுதான் என்று கூறினாராம்!

இந்தச் 'சதி யக்ஞம்,' இரண்டு வருஷமாக நடைபெற்றதாம்!

மதுரை மாவட்ட காங்கிரசில் கலவரம்

போலீஸ் பாதுகாப்புடன் செயற் குழு தேர்தல்

8—5—55-ல், திரு. டி. கே. ராமா தலைமையில் சௌராஷ்டிர செகண்டரி பாடசாலையில், மதுரை மாவட்ட காங்கிரஸ் செயற் குழு தேர்தல் நடைபெற்றது. கோயங்காவின் 'தினமணி' உதவி ஆசிரியர் திரு. எழுமலையும், திரு. காளியப்பனும் போட்டியிட்டனர்; இருவரும் சமமாக 9 வாக்குகள் பெற்றனர்; பின்னர், 'திருவுளச் சீட்டு'ப் போட்டுப் பார்த்ததில் திரு. எழுமலை வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது.

இதன் விளைவாக, தோல்வியுற்ற திரு காளியப்பன் குழுவினர் ஆத்திரங்கொண்டு, செங்கல், செருப்புகளை வீசியும், இழிவாகப் பேசியும் வெற்றி பெற்ற குழுவினரைத் தாக்கினர்.

இதன் காரணமாக, திரு எழுமலை குழுவைச் சார்ந்த திரு இராமகிருஷ்ணன், திரு. துரைப்பாண்டியன், திரு இராசாராம் அடிபட்டதாகத் தெரியவருகிறது.

மீண்டும், ஒரு குழுவினர், வாக்காளர்களை பணங்கொடுத்து ஒளித்து வைத்துக்கொண்டதாகக் கூறி, மேஜை, நாற்காலிகளைத் தூக்கி அடிக்கவே, இதன் விளைவாக பெரும் கலவரம் ஏற்பட்டு, போலீசார் வரவழைக்கப்பட்டு, அமைதியை நிலைநாட்டினர்; பின்னர் பலத்த ஆயுதம் தாங்கிய போலீஸ் படையின் பந்தோபஸ்துடன் தேர்தல் நடைபெற்றது.

—(ந. நி.)

ஒத்துழைப்போம்-விட்டுக்கொடோம்

வெற்றி விழாவில் சோவியத் தலைவர்கள் பேச்சு

கம்யூனிஸ்டுகளின் ஆதிக்கத்திலுள்ள கிழக்கு ஐரோப்பா, இன்று, நாஜி ஜெர்மனி வீழ்ச்சியின் 10-வது ஆண்டு விழாவைக் கொண்டாடியது.

மாஸ்கோவில் நடைபெற்ற விழாவில் கம்யூனிஸ்டு கட்சியின் முதல் செயலாளரான நிகிதா குருஷேவ் பேசினார்.

"ரஷியா மேற்கு நாடுகளுடன் ஒத்துழைக்க விரும்புகிறது," என்று அவர் கூறினார்.

கிழக்கு ஜெர்மன் தூதுவர் அலுவலகத்தில் இந்த விழா நடைபெற்றது. இதில் சோவியத் பிரதமர் புல்கானின் உள்பட பலர் கலந்துகொண்டனர்.

நிகிதா குருஷேவ் தொடர்ந்து பேசுகையில், ரஷியா, யூகோஸ்லாவேகியாவுடன் நட்புடன் இருக்க விரும்புகிறதென்றும், இரு நாடுகளுக்குமிடையே சில்லறைப் பிரச்சினைகள் இருந்தபோதிலும் தாங்கள் நண்பர்களாக இருக்க விரும்புவதாகவும் அவர் தெரிவித்தார்.

அணுகுண்டு, நீர்வளிக்குண்டு இவை பற்றி அவர் குறிப்பிடுகையில், 'கண்ணுக்குக் கண்—பல்லுக்குப் பல்' என்ற பழமொழியைக் கூறி, "ரஷியா இப்பிரச்சினையில் ஒரு பல்லுக்கு இரண்டு பல்லைப் பிடுங்கும்," என்று கூறினார்.

இலஞ்சப் புகார்களை விசாரிக்க 'புகார் நிறுவனம்'

மத்தியப் பிரதேச சர்க்கார் அமைக்கிறது

நாகபுரி, மே 10—

சர்க்கார் ஊழியர்கள் மீது தாக்கல் செய்யப்படும் இலஞ்சப் புகார், மரியாதைக் குறைவான நடத்தை பற்றிய புகார் முதலியனவற்றை விசாரிப்பதற்காக 'புகார் நிறுவனம்' ஒன்றை மத்தியப் பிரதேச சர்க்கார் நிறுவியுள்ளனர் என்று தெரிகிறது.

எம். பி. ட்யூப் என்ற மராமத்து இலாகா துணை மந்திரியைத் தலைவராகக் கொண்ட அந்த நிறுவனம், சர்க்கார் ஊழியர் மீது சுமத்தப்படும் இலஞ்சக் குற்றம் முதலியவற்றை விசாரித்தறிந்து, ஊழியர்கள் மீது மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும், அளிக்கப்பட வேண்டிய தண்டனை குறித்தும் கருத்தறிவிப்பதும் சிபாரிசு செய்வதுமான பணிகளை மேற்கொள்ளுமாம்.

மதுவிலக்கு! நான்கு நாட்களுக்கு மட்டுமே!

அ. இ. காங்கிரஸ் குழு கூட்டத்திற்கான முன்னேற்பாடு

பேர்காம்பூர், மே 9—

நான்கு நாட்களுக்கு மட்டுமே மதுவிலக்கை செயலாற்றியுள்ளனர், பேர்காம்பூர் அதிகாரிகள்!

அந்த நான்கு நாட்களிலும் அகில இந்தியக் காங்கிரஸ் குழுவின் கூட்டம் அங்கு நடைபெறுகிறது.

கலால் இலாகா அதிகாரியின் உத்திரவுப்படி நேற்று முதல் 11-ந் தேதி வரை அங்கு எந்த விதமான மது வகைகளும் விற்கக் கூடாது என தடுக்கப்பட்டிருக்கின்றன.

ஒப்புதல் தருவார்!

வருகிற ஜூன், ஜூலை திங்களில் நான்கு வல்லரசு நாடுகளின் அதிபர்கள் கூடிப்பேச வேண்டுமென்ற கோரிக்கைக்கு அமெரிக்க குடியரசுத் தலைவர் ஐசன்ஹோவர் இன்று தமது ஒப்புதலைத் தருவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

காங்கிரசார் மனப்போக்கு மாறவேண்டும்

வினோபா பாவே கருத்து

"காங்கிரஸ்காரர்களின் மனப்பான்மையில் புதிய ஒரு மாறுதல் ஏற்படாவிட்டால் ஆவடி காங்கிரஸ் தீர்மானங்களால் எவ்வித அர்த்தமும் இல்லை; ஆவடி தீர்மானங்கள் ஒரு புதிய வழியைக் காட்டியிருக்கின்றன; ஆனால், அந்தத் தீர்மானங்களை எப்படி அமுல் நடத்துவது என்பதுதான் முக்கியமான கேள்வியாகும்."

இவ்வாறு ஆச்சாரியா வினோபா பாவே, பெர்காம்பூரில் நடைபெற்ற அகில இந்திய காங்கிரஸ் செயற் குழுக் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

"'அகிம்சை'யின் சக்தி எவ்வளவுதூரம் இருக்கிறது என்பதை மதிப்பிடுவதற்காகவேதான் 'பூமிதான' இயக்கத்தை நான் ஆரம்பித்தேன்; எந்த ஒரு நாடும் இரத்தம் சிந்தாமல் நிலப் பிரச்சினையைத் தீர்த்தது கிடையாது," என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

தொடர்ந்து அவர் பேசுகையில், "நியாயமான முறைப்படி விஞ்ஞானம் மனித வர்க்கத்தின் வளர்ச்சிக்கு ஒரு உதவியாக இருக்க வேண்டிய நிலை தலைகீழாக மாறி, 'துரதிருஷ்டவசமாக' மனிதனே இன்று விஞ்ஞானத்தின் கருவியாக மாறிவிட்டான்," என்றும் குறிப்பிட்டார்.

நேட்டால் மாணவர்கள் 'புரட்சி'

மாதா கோவிலைக் கொளுத்தினர்; வேத பாடப் போதனையை எதிர்த்தனர்

டர்பன் (நேட்டால்) மே. 9—

ஆப்பிரிக்க மாணவர்கள், கிறிஸ்துவ தேவாலயம் ஒன்றையும், 'பிரார்த்தனைக் கூட'த்தையும் தீயிட்டுக் கொளுத்திய சம்பவங்கள் தெரிய வந்துள்ளன; அவர்கள் வேலை நிறுத்தத்திலும் ஈடுபட்டுள்ளனர் என்று கூறப்படுகிறது.

(தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க.)

நம் நாடு
தி.மு.க.தின இதழ் | ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 10—5—'55 செவ்வாய்

அபாய அறிவிப்பு

"பொருளாதார ஏற்றத் தாழ்வு, ஏழைகள்—பணக்காரர்கள், உழைப்பவர்கள்—உழைக்கத் தேவை இல்லாதவர்கள், உழைத்தும் பயன் பெருதவர்கள்—உழைக்காமலேயே பலன் பெறுபவர்கள், வாழ்விழந்தவர்கள், வாழமுடியாதவர்கள்—வாழ்வின் இன்பங்களில் மிதப்பவர்கள், வாழப் பிறந்தவர்கள், சுரண்டப்படுபவர்கள்—சுரண்டுபவர்கள், அடக்கி ஒடுக்கப்படுபவர்கள்—அடக்கி ஒடுக்குபவர்கள்—என்கிற அநியாய நிலை, நிலை குலைக்கப்பட்டு, எல்லோரும் சக்திக்கு ஏற்ப உழைத்து, உழைப்பின் விளைவுகளை தேவைக்கேற்ப பங்கிட்டுக் கொள்வதுமான 'சமதர்ம' நிலை மலர வேண்டும் நாட்டில்"

என்று, முற்போக்குவாதிகள் என்போர் அனைவரும் முழங்குகின்றனர்—இங்கு!

"மாற்றங்களையும், முன்னேற்றங்களையும் தவிர்க்க முடியாமல் ஏற்றுக்கொண்டு வளர்ந்து முன்னேறிவரும் மனித சமூகம், தனது இருபதாம் நூற்ருண்டுக் கால கட்டத்தில்,' சமதர்ம லட்சியத்தை ஏற்றுக்கொண்டு, அதனை ஈடேற்றிக்கொள்ளும் வெற்றிக்காக மின்னல்போல் தாக்கிய இன்னல்களையும், இடுக்கண்களையும் சந்தித்துச் சமர் புரிந்து சமாளிக்க வேண்டியிருந்தது," என்ற வரலாறு எழுதப்படவிருப்பதாக, முற்போக்குவாதிகள் பலர் இன்று இன்பக் கனவு காண்பதில் வியப்பொன்றுமில்லை!

ஏழை—பணக்காரன் என்ற தோற்றத்திலிருக்கும் பொருளாதார ஏற்றத் தாழ்வு மட்டுமின்றி, பிறப்பாலேயே உயர்ந்தவன்—தாழ்ந்தவன் என்ற சமுதாய வேறுபாடும், பேதமும் ஒழிய வேண்டும் என்பவர்கள்தான் நாம்!

'விரல்விட்டு எண்ணக்கூடிய ஒரு சிலர், தங்களின் சொந்த சுகபோக வாழ்க்கைக்காக எண்ணற்றோரின் உழைப்பைச் சுரண்டிக் கொழுப்பது கொடுமை,' என்று கூறுவர், முற்போக்குவாதிகள்; அதனை மறுப்பவரல்ல, நாம்!

'ஏற்கனவே ஓங்கி உயர்ந்த வாழ்வு பெற்ருேர் மேலும் மேலும் வளம் பெறவும், வாழ்வின் அடித்தளத்தில் அழுந்திக் கிடப்போர் தொடர்ந்து வாழ்வு தரப்படாமல் வாட்டப்படுவதுமான நிலை கொடியது,' என்பர், முற்போக்குவாதிகள்; இல்லையென்று இயம்பியதில்லை நாம்!

'மக்களிடையே ஒரு சிலர் உயரவும், மிகப் பலர் தாழவும் ஆன நிலை வளர்ப்பது, பிற்போக்குத்தனம்,' என்பர், முற்போக்குவாதிகள்; ஆமோதிப்பவர்கள் நாம்.

ஆனல், மக்களிடையே ஒரு சிலர் உயர்த்தப்படுவதும், பலர் தாழ்த்தப்படுவதுமே கொடியது என்ருல், "அந்த மக்கள் எல்லோரும் ஒரே தாய் வயிற்றுப் பிள்ளைகள்—பாரத புத்திரர்கள் — இந்திய சகோதர தேசிய இன மக்கள்—'ஏக இந்தியா' என்ற ஒரே நாட்டவர்—என்று கூறிவிட்டு, அந்த 'ஏக இந்தியா'வின் ஒரு பகுதியை உயர்த்தவும், அடுத்த பகுதியை தாழ்த்தவுமான செயலை, எத்தனை கொடியது என்று முற்போக்குவாதிகள் வர்ணித்துக் கூறக் கடமைப்பட்டவர்கள் அல்லவா?" என்று தென்னட்டவர் கேட்க வேண்டியவர்களாயிருக்கின்றனர்.

ஒரு சிலரின் ஏற்றமிகுந்த வாழ்வை மேலும் போற்றி வளர்த்து மிகப் பலரை மேலும் நலிவுறச் செய்வது, 'பிற்போக்குத்தனமானது — அநியாயமானது," என்று கூறப்படும் போது, 'ஏக இந்தியா'வில் ஒரு பகுதியினர் மட்டும் தங்கள் நலிந்த வாழ்வைச் சீர் செய்ய வகை வகையான ஏற்பாடும் மறு பகுதியினரின் வளைந்த வாழ்வு நிமிர்க்கப்பட வழி ஏதும் காணப்படாமலிருப்பதும், பிற்போக்கானதல்லவா — அநியாயமானதல்லவா என்றும் தென்னட்டவர் கேட்கின்றனர்—'முற்போக்குவாதிகள்' என்று தங்களைக் கூறிக் கொள்வோரை!

இந்தியப் பேரரசு சுமார் ரூ. 2,500 கோடி செலவில் தீட்டி தீவிரமாக நிறைவேற்றி முடித்துவரும் முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் தமிழகம், கேரளம், கன்னடம், ஆந்திரம் ஆகிய மாநிலங்கள் - குறிப்பாக தமிழகம், 'பகிரங்கமான ஓரவஞ்சனைக்கு ஆளாக்கப்பட்டு, அலட்சியப் படுத்தப்பட்டது,' என்ற உண்மையை 'பிற்போக்கு வாதிகள்' என்று அழைக்கப்படும் காங்கிரஸ் காரர்களில் கூட சிலர் உணர்ந்து, உளம் நொந்து, உரைத்துவிட்டனர்.

'ஏக இந்தியா'வில், வளமான—தரமான வாழ்வு பெற்றவர்களாக வடபகுதி மக்கள் உயர்த்தப்படுவதற்கு அந்தப் பகுதி தொழில் மயமாவதும், மேலும் தங்கள் வாழ்க்கையின் தரத்தை உயர்த்திக் கொள்ள வடபகுதி மக்கள் மிகுதியாக, உற்பத்தி செய்து குவிக்கும் வாழ்வுக்கான பண்டங்கள் பலவற்றையும் விற்பதற்காக விவசாயக் காடாக்கிய தென்பகுதியை 'மார்க்கெட்'டாக்குகிற ஏற்பாடு—பொருளாதார அபிவிருத்தி ஏற்பாடு - முதல் ஐந்தாண்டுத் திட்டம், 'நியாயமானதுதானு?' என்று வினவுகின்றனர்—தென்னுட்டவர்!

'ஒரே நாடு', 'ஏக இந்தியா' என்று கூறிக்கொண்டு, அந்த 'ஏக இந்தியா'வில் வடக்கு வாழுற ஓங்கி வளரவும், ஏற்கனவே தேய்ந்து வரும் தெற்கு மேலும் தேயவும் வழி செய்யும் ஏற்பாடுதான் ஐந்தாண்டு அபிவிருத்தித் திட்டம் என்றும், அது, வடக்கும்—தெற்கும், பொருளாதாரத் துறையில் மலையும் — மடுவும் போன்றவை என்ற பயங்கரமான எதிர்காலத்தின் 'சிருஷ்டி கர்த்தா' என்பதையும் முற்போக்குவாதிகள் உணரவில்லையா என்றும், ஒரு சிலர்—பணக்காரர்கள்—முதலாளிகள் பலருடைய வாழ்வைத் தட்டிப் பறித்துத் தங்களை உயர்த்திக் கொள்ளும் கொடுமையைக் காட்டிலும்'ஏகஇந்தியா'என்ற 'ஒருநாட்டின்'வடபகுதி, தான் வளம் பெற தென்பகுதியை 'மார்க்கெட்'டாக்கும்கொடுமை அதிகமானதல்லவா என்றும், தென்னுட்டவர், பொருளாதார ஏற்றத் தாழ்வு பற்றி பேசும் முற்போக்கு வாதிகளைக் கேட்கின்றனர்.

"ரூ. 5,600 கோடி செலவில் இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டம் தயாராகிறது," என்று, செய்திகள் கூறுகின்றன.

'திட்டம் தயாரிப்பதில், பொது மக்கள் தங்கள் கருத்தறிவிக்க வேண்டும்,' என்று பண்டிதர் முழங்கினுராம்.

'அறிவித்த கருத்தெல்லாம் செவிடர் காதில் ஊதிய சங்காகவே இருந்து வருகிறது,' என்று அலுத்துப் போய்விடாத தென்னுட்டு மக்கள் 'இந்தத் திட்டத்திலேனும் எங்கட்குரிய நியாயமான பங்கு தரப்படாவிட்டால்...? என்ற கேள்வியையும் எழுப்புகின்றனர்.

அந்தக் கேள்வி, இதுவரை தென்னுட்டவர் நலனில் அக்கரை காட்டாத அத்தனை பேருக்கும்-முற்போக்குவாதிகளென்போருக்கும்தான்— ஒரு 'அபாய அறிவிப்பா'கவே இருக்கும் என்பது மிகையாகாது!

அர்ஜெண்டைனுவில் கிளர்ச்சி வலுக்கிறது!

அர்ஜெண்டைனுவில் இப்போது கத்தோலிக்க மதத்தினருக்கும்—அரசாங்கத்திற்கும் இடையே நடைபெற்று வரும் சச்சரவு முற்றிவிட்டதாம்.

சர்க்கார் மாளிகையின் மீது படையெடுத்துச் சென்ற மூவாயிரம் பேர் கொண்ட மக்கள் கூட்டத்தை போலீசார் தடுத்து நிறுத்தியிருக்கின்றனர்; அப்போது போலீசாருடன் ஏற்பட்ட கைகலப்பில் 20 கத்தோலிக்கர்களைப் போலீசார் கைது செய்துள்ளனர்.

பலர் கைது செய்யப்பட்ட பின்னரும், மக்கள், 'கிறிஸ்து வெற்றி பெறுவார்' என்று ஒலி எழுப்பினுர்களாம்!

அர்ஜெண்டைனு குடியரசின் கீழ் மாதா கோவிலையும், அரசாங்கத்தையும் பிரித்து தனித்தனியாக இயங்க வைக்கும் மசோதா ஒன்றை அர்ஜெண்டைனுவின் பாராளு மன்றம் விவாதிக்க இருக்கிறது.

வாடிகன் தூதுவராலயத்தின் முன்புகூடி நின்று ஆர்ப்பாட்டம் செய்த மக்களை குதிரைப் போலீஸ் படையினர் உருவிய வாளுடன் நின்று எதிர்த்தனர். மக்கள், போலீசார் மீது கல் எறிந்தார்களாம். யாருக்கும் காயமில்லை என்று தெரிகிறது.

பின்னர் மக்கள் தேசிய கீதம் பாடிக்கொண்டே வீடுசென்றனராம்.

வேலையற்ருேர் நிலைமை

வேலை தேடித்தரும் நிலையங்கள், 1955 பிப்ரவரியில், 12,293 பேரையும், 1955 மார்ச் மாதத்தில் 12,763 பேரையும் வேலையில் அமர்த்தியுள்ளனவாம். மார்ச் மாதத்தில் சர்க்காரும், தனிப்பட்ட முதலாளிகளும் வேலை தேடித் தரும் நிலையங்களுக்குத் தகவல் அறிவித்த காலி இடங்களின் எண்ணிக்கை 22,708 ஆகவும், பிப்ரவரியில் அந்த எண்ணிக்கை 20,094 ஆகவும் இருந்தது. மார்ச் மாதத்தில் வேலை தேடித் தரும் நிலையங்களின் உதவியைப் பெற்றவர்கள் 4,847 பேராம். இத்தொகை பிப்ரவரியில் அந்நிலையங்களின் உதவியைப் பெற்றவர்களின் எண்ணிக்கையைவிட 412 அதிகமாகும்.

'இலங்கை-இந்தியா ஒப்பந்தம் குப்பைக் காகிதமே!'

இலங்கை பத்திரிகையின் கருத்து

கொழும்பு, மே 7—

"குடி உரிமை பற்றி இந்தியாவுக்கும் — இலங்கைக்குமிடையே ஏற்பட்டுள்ள ஒப்பந்தம் வெறும் குப்பைக் காகிதமே,"

என்று, இலக்கையிலிருந்து வெளிவரும் 'டைம்ஸ் ஆப் சிலோன்' என்ற சுயேச்சை இதழ் கருத்தறிவித்துள்ளது.

"இந்திய வம்சாவழியில் வந்தவர்களை இலங்கையராகவோ, அன்றி இந்தியராகவோ பதிவு செய்துகொள்ளும் பிரச்சினை இன்னும் தீரவில்லை" என்றும் அப்பத்திரிகை கூறுகிறது.

"இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இலங்கை சர்க்காரே முதலில் முயற்சிக்க வேண்டும்; ஏனெனில், இந்தியப் பிரதமர் நேரு மக்கள் சபையில் தெரிவித்திருப்பதுபோல 'நாடற்றவர்'களின் பிரச்சினை இலங்கையின் பிரச்சினையே அன்றி இந்தியாவின் பிரச்சினையல்ல," என்றும் அந்தப் பத்திரிகை கூறுகிறது.

'வயது சென்றவரின் வாதம்!'

ஆச்சாரியார் மீது இலங்கைப் பிரதமர் சீற்றம்

கொழும்பு, மே 8—

"இராசகோபாலாச்சாரியாரின் மூளை, வயதின் காரணமாக மேகம் சூழ்ந்ததுபோல் காணப்படுகிறது,"

என்று இலங்கைப் பிரதமர் சர் ஜான் கொத்தலாவலை கூறியுள்ளார்.

'முதிர்ந்த வயதுடைய மனிதரின் பேச்சு,' என்று கொத்தலாவலை, பாண்டுங் மாநாட்டில் நடந்துகொண்டது பற்றி ஆச்சாரியாரின் கருத்துக்குப் பதில் அளிக்கும் முறையில் இலங்கைப் பிரதமர் மேலும் கூறினர்.

தமிழ் வார இதழ் ஒன்றில், இராசகோபாலாச்சாரியார் எழுதியுள்ள கட்டுரை ஒன்று பற்றியே கொத்தலாவலை தனது கருத்தைக் கூறினர்.

ஆச்சாரியாருக்கு தான் பதில் அளிக்கப் போவதில்லை என்றும், தான் கூட வயது சென்றபின்னர் அப்படிப் பேசலாம் என்றும் கொத்தலாவலை குறிப்பிட்டார்.

சாகும்வரையில் உண்ணுவிரதம்

ஐக்கிய கர்நாடக மாநில அமைப்புக்கு காங்கிரசார் எதிர்ப்பு

பெங்களூர், மே 8—

ஐக்கிய கர்நாடக மாநிலம் அமைக்கும் முயற்சியை எதிர்த்து மாண்டியாவைச்சேர்ந்த ருதேவாஹாலி கௌடா, கௌடகிரி நாகய்யா என்னும் இரு காங்கிரஸ் காரர்கள் வரும் 19-ந் தேதி முதல் சாகும்வரை உண்ணுவிரதம் இருக்கப்போவதாக அறிவித்திருக்கின்றனராம்.

ஐக்கிய கர்நாடக அமைப்புக்குச் சாதகமாக, மைசூர் காங்கிரசில் கருத்து ஒற்றுமை ஏற்படுத்துவதற்காக ஹூப்ளி காங்கிரஸ்காரர் ஒருவர் அண்மையில் உண்ணுவிரதம் இருந்தார். காங்கிரசார் அளித்த சில வாக்குறுதிகளின் பேரில் 10 நாளைக்குப் பிறகு அவர்தம் 'விரத'த்தை நிறுத்திக் கொண்டாராம்.

மைசூர் 'மன்னர்' ஆப்பிரிக்கா செல்வார்

மைசூர் மன்னர் தென்னுப்பிரிக்காவிற்குச் சென்று அங்கு காட்டு விலங்குகள் பற்றி நேரில் தெரிந்து வருவார் என்று தெரியவருகிறது.

புரட்சி கம்யூனிஸ்டுகளுக்கு ஆயுள் தண்டனை

டம்டம் கொள்ளைவழக்கில் தீர்ப்பு

கல்கத்தா, மே 8—

சர்க்காருக்கு எதிராக போர் புரிந்ததாகவும், நாட்டில் கிசான் மஸ்தூர் ராஜ்யமொன்றை அமைக்க ஆயுதம் ஏந்தி சர்க்காரை எதிர்த்ததாகவும் குற்றம் சாட்டப்பட்ட 20 புரட்சி கம்யூனிஸ்டுகளை அலிப்பூர் நீதி மன்றத்தினர் தண்டித்தனர்.

இந்தியப் புரட்சி கம்யூனிஸ்டு கட்சியின் தலைவர்களில் ஒருவரான பன்னலால் தாஸ் குப்தா என்பவர் உள்பட 10 பேருக்கு ஆயுள் தண்டனை தரப்பட்டது.

மேலும் பத்து பேர்களுக்கு மூன்று மாத முதல் ஐந்தாண்டுகள் வரையில் தண்டனை தரப்பட்டது; மூன்று பேர் விடுதலை செய்யப்பட்டனர்.

குற்றம் சாட்டப்பட்டவர்கள் அனைவரும் 1949-ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 29-ம் நாளன்று டம்டம் விமான நிலையம், மத்திய சிறை, சர்க்கார் வெடி மருந்துச் சாலை இவைகளைத் தாக்கி ஒரு போலீசாரையும், ஒரு காவல்காரரையும் கொன்று, துப்பாக்கிகளைத் தூக்கிச் சென்றனர் என்பது போலீசாரின் வழக்கு.

அதன் பின்னர் இவர்கள் பசீர்காத் என்னுமிடத்துக்குச் சென்றனராம் வழியில் இவர்கள் ஒரு சர்க்கார் அதிகாரியைப் பிடித்து கைதியாக்கிக் கொண்டனர் என்று சொல்லப்பட்டது. பின்னர் போலீஸ் நிலையம் ஒன்றையும் இவர்கள் தாக்கினுர்களாம்.

புறப்பட்ட இடத்திற்கே திரும்பிவரும் விமானப் போக்குவரத்து

சென்னையிலிருந்து பெங்களூர், கோவை, கொச்சி, திருவனந்தபுரம், மதுரை, திருச்சி வழியாக சென்னைக்கே திரும்பிவரும் விமானப் போக்குவரத்து சீக்கிரமே ஆரம்பமாகுமென இந்திய விமானப் போக்குவரத்து கார்ப்பொரேஷன் நிர்வாகி கே. எம். குப்தா தெரிவித்திருக்கிறார்.

நன்றி அறிவிப்பு

"1—5—55 சென்னை, திருவல்லிக்கேணி கடற்கரையில் 42-வது வட்ட தி. மு. கழகக் கிளையின் சார்பில் நடைபெற்ற மேதின விழா கூட்டத்திற்கு, எங்களோடு ஒத்துழைத்த இயக்கத் தோழர்களுக்கும், நன்கொடை தந்து உதவிய பொது மக்களுக்கும், ஊர்வலத்தை நல்ல முறையில் நடத்த உதவிய மாவட்ட செயலாளருக்கும், ஓவியங்கள் வரைந்துதவிய தோழர் பாரி அவர்களுக்கும், போதுமான ஆதரவளித்த போலீஸ் அதிகாரிகளுக்கும் கிளையின் சார்பில் நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்," என்று மேற்படி வட்டச் செயலாளர் தோழர் நீல நாராயணன் தெரிவித்துக் கொள்கிருர்.

'நம் நாடு' இதழுக்கு அன்பளிப்பு

1—5—55 மாலை சென்னை திருவல்லிக்கேணியில் நடைபெற்ற மே தின விழாப் பொதுக் கூட்டத்தில், சென்னை இராம்நாத் அச்சகத் தொழிலாளர்கள் சார்பில், பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களிடம், 'நம் நாடு' வளர்ச்சிக்காக ரூ. 3—8—0 நன்கொடை தரப்பட்டது—வரப் பெற்ருேம்—நன்றி— பொறுப்பாளர்.

"தெற்கே பெரும் தொழிற்சாலைகள் அமைய வேண்டும்"

எம். வி. வெங்கடராமன் கருத்து

"சென்னை, ஐதராபாத், மைசூர், திருவாங்கூர்—கொச்சி ஆகிய மாநிலங்களிலுள்ள மக்கள், இந்தியாவின் மற்ற பகுதிகளிலுள்ள மக்களைக் காட்டிலும் அதிகமாக படித்திருக்கிறார்கள்; இவர்களிடையே வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்துக் கொண்டே போகிறது; தெற்கிலிருந்து சென்ற ஏராளமான மக்கள் கிழக்கு இந்தியாவிலும், மேற்கு இந்தியப் பகுதியிலும் அலுவல்களில் ஈடுபட்டுள்ளனர்,"

என்று, சென்னை வியாபாரிகள் சங்கத்தில் பேசுகையில் தோழர் எம். வி. வெங்கட்ராமன் கூறினர்.

"இந்த நிலைமையைப் போக்க வேண்டுமென்றால், பெரிய தொழிற்சாலைகளைத் தெற்கே அமைக்கவேண்டும்,"

என்று அவர் மேலும் கூறினர்.

'தொழில் துறையில் தென் இந்தியா அலட்சியப்படுத்தப்படுகிறது,' என்ற பிரச்சினையைப் பற்றிக் குறிப்பிடுகையில்தான் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

தென் இந்திய இசைக்கருவிகள்

ஐரோப்பியர் போற்றுகின்றனர்!

சென்னை, மே 7—

"தென் இந்திய இசைக் கருவிகளில் தலைசிறந்து விளங்கும் வீணை எழுப்பும் இன்ப ஒலி கேட்டு ஐரோப்பிய மக்கள் பெரிதும் மகிழ்ச்சியுற்றார்கள்," என்று தோழியர் மிருணளினி சாராபாய் கூறியுள்ளார். இவர் ஐரோப்பாவில் சுற்றுப்பயணம் செய்து இப்போதுதான் திரும்பியுள்ளார். இவருடன் திருமதி கமலா-தாமோதரன் சென்றிருந்தார். மிருணளினியின் நடனத்திற்கு கமலா-தாமோதரன் வீணை வாசித்தார் என்று தெரிகிறது. இவர்களின் போக்கு-வரத்துச் செலவை இந்திய சர்க்கார் ஏற்றுக் கொண்டது.

"தென்னிந்திய இசைக் கருவிகளான மிருதங்கம், தபேலா இவைகளை பிரான்ஸ், பெல்ஜியம், கிழக்கு ஜெர்மனி, இத்தாலி, சிசிலி ஆகிய நாட்டு மக்கள் மிகவும் நன்கு பாராட்டினார்கள்," என்று மிருணளினி மேலும் தெரிவித்திருக்கிறார்.

தஞ்சை பூபாள குறவஞ்சி, பரத நாட்டிய நாடகம் இவைகளையும் ஐரோப்பிய மக்கள் பெரிதும் ரசித்தார்களாம்.

சேலம் சிறையிலுள்ள கம்யூனிஸ்டு கைதிகள்

பரோலில் விடுதலை செய்யக் கோரிக்கை

சேலம் சிறையிலிருக்கும் கம்யூனிஸ்டு கைதிகள் 25 பேர்களை பரோலில் விடுதலை செய்யுமாறு சென்னை முதலமைச்சர் காமராசரிடம் கம்யூனிஸ்டு உறுப்பினர் கல்யாணசுந்தரம் கோரியுள்ளார்.

கடந்த 5 ஆண்டு காலமாகச் சிறையிலுள்ள இக்கைதிகளை உடல் நிலை காரணமாகவும், குடும்ப நிலை காரணமாகவும் பரோலில் விடுதலை செய்யுமாறு அவர் கோரியுள்ளார். குறிப்பாக சுந்தரம், சிவசாமி, வீரவன் ஆகியோரை விடுதலை செய்யுமாறு கோரியுள்ளார்.

இக்கைதிகள் சிலரின் உடல் நிலை மிகவும் மோசமாகிவிட்டது என்றும், சில குடும்பங்களில் அவர்களின் உறவினர்கள் மரணம் அடைந்திருக்கிறார்கள் என்றும் முதலமைச்சரிடம் எடுத்துச் செல்லப்பட்டதாம்.

இது பற்றி யோசிப்பதாக முதலமைச்சர் பதிலளித்தார் என்று தெரிகிறது.

பனிமனிதன் கூச்சமுள்ளவனும்!

பெங்களூர், மே 9—

"பனி மனிதன் மிகவும் கூச்சமுள்ளவன்," என்று டாம் ஸ்டோபார்ட் கூறியுள்ளார். இவர் எவரெஸ்டு மலை உச்சி மீது ஏறிய குழுவினருடன் புகைப்படம் பிடிக்கச் சென்றவர்.

"மனிதர்களைத் தின்னும் அளவிற்குப் 'பனி மனிதன்' கொடிய குணம் கொண்டவனல்ல," என்று அவர் கருதுகிறார்.

16,000 அடியிலிருந்து 19,000 அடிவரை உள்ள இமாலயப் பகுதியில் இப் பனிமனிதன் வாழ்வதாகவும், அவன் உணவு ஒருவிதமான முயல் என்றும் அவர் கூறினர்.

எவரெஸ்டு மலை ஏறிய குழுவினர் ஒரு இடத்தில் முயல் ஒன்றின் பிணத்தைப் பார்த்தனர் என்றும் அதன் அருகே பனி மனிதனின் அடிச்சுவடுகள் காணப்பட்டதாகவும் அவர் கூறினர்.

இமயமலையில் பெயர் குறிப்பிட முடியாத பல மிருகங்கள் வாழ்வதாகவும், மலை ஏறிச் சென்ற குழுவினர் மூன்று விலங்குகளின் எலும்புக்கூடுகளை எடுத்துச் சென்றிருப்பதாகவும், அந்த மிருகங்கள் 300 ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்திருக்க வேண்டும் என்றும் டாம் கூறினர்.

உயர்ந்துகொண்டே செல்லும்

திட்டங்களின் மதிப்பீடு!

முக்கியமான சில நீர்விசை மின்சாரத் திட்டங்கள், நீர்ப்பாசனத் திட்டங்கள் ஆகியவற்றின் மதிப்பீடுகள் அடிக்கடி உயர்த்தப்பட்டு வருவது, மத்திய சர்க்காருக்கு மிகுந்த கவலை தருவனவாக இருக்கின்றனவாம்.

தற்போது, பக்ரா — நங்கல், ஹிராகுட், தாமோதர் பள்ளத்தாக்குத் திட்டம் ஆகிய திட்டங்களைப் பொறுத்தவரையில் முடிவு செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகையில் மேலும் 150 கோடி ரூபாய் உயர்த்தப்பட்டிருக்கிறதாம்.

இந்த மதிப்பீட்டுத் தொகை, முதன் முதலில் இத்திட்டங்களுக்கென மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டுத் தொகையில் 46 சத விகிதம் அதிகமான தொகையாகும்.

அமெரிக்காவின் 'இசை இன்பம்'!

நியூயார்க், மே. 5—

அமெரிக்காவில், மே திங்கள் முதல் வாரம் 'சங்கீத வார'மாகக் கொண்டாடப்படுகிறதாம்.

தற்போது அமெரிக்கா முழுமையிலும் 70,000 பள்ளிக்கூட சங்கீதக் குழுக்கள் இருப்பதாகவும், சுமார் 5 கோடிக்கு மேற்பட்ட குழந்தைகளுக்கு 3,40,000 சங்கீத ஆசிரியர்கள் சங்கீதம் கற்றுத் தருவதாகவும், அமெரிக்காவில் ஆண்டொன்றுக்கு சங்கீதத்திற்காக சுமார் 200 கோடி டாலர் செலவிடப்படுவதாகவும் கூறப்படுகிறது.

சமுதாய நலத் திட்டம், சமுதாய அபிவிருத்தித் திட்டம், தேசிய விரிவுபடுத்தும் 'செர்வீஸ்' வட்டாரங்கள் ஆகியவற்றில், 1954 செப்டம்பர் மாதம்வரை மொத்தம் 4797 பள்ளிக்கூடங்கள் புதிதாகத் திறந்து வைக்கப்பட்டன.

1954-ம் ஆண்டில் உற்பத்தியான கைத்தறித் துணியின் அளவு அதற்கு முந்திய ஆண்டின் உற்பத்தியைக் காட்டிலும் 1,180 லட்சம் கெஜம் அதிகமாகும்.

மதுராந்தகத்தில் மே தின விழா

மதுராந்தகம் தி. மு. கழகச் சார்பில் 7—5—55 மாலை 7 மணியளவில், காந்தி மேடையில், மே தின விழாப் பொதுக் கூட்டம் சிறப்புற நடைபெற்றது.

தோழர் பு. சிவானந்தம் தலைமை தாங்கினர்.

தோழர்கள் ஆ. சண்முகம், எம். எல். பாலு, ஏ. எஸ் இமயவரம்பன் ஆகியோர் சிறிது நேரம் பேசினர்.

இறுதியாக தோழர் முகவை ஆர். எஸ். பாண்டியன், தி. மு. கழகம் மே தின விழாக் கொண்டாடுவதன் அவசியம் குறித்தும், திராவிட நாட்டின் விடுதலையில் தான், இந்த நாட்டு ஏழை—எளிய தொழிலாளி—பாட்டாளி விவசாய—நடுத்தர மக்களின் நல்வாழ்வு உள்ளடங்கியுள்ளது என்றும், அடக்கி ஒடுக்கப்பட்ட திராவிட மக்களின் நிரந்தரமான நல்வாழ்விற்கு வழி கோலும் குரல்தான் 'திராவிட நாடு திராவிடருக்கே' என்றும், உழைக்கும் மக்களின் உரிமைக்காக உயிர் ஈந்த தொழிலாளரை நினைவில் கொண்டு கொண்டாடப் பெறும் மே தின விழாவில் திராவிட மக்களின் உறுதி 'திராவிடம் பெறுவோம்' என்பதாகத்தானிருக்க முடியும் என்றும் விளக்கி நீண்டதோர் சொற்பொழிவாற்றினர்.

சேவூர் (வ. ஆ.)

6—5—55 மாலை 5 மணிக்கு தி. மு. கழக நிலையத்திலிருந்து தோழர் எம். பி. முனுசாமி தலைமையில் ஊர்வலம் நடைபெற்றது. பின்னர் 7 மணிக்கு கழக பணிமனையில் நடைபெற்ற கூட்டத்தில் தோழர் அ. பரசுராமன் தலைமையில் தோழர்கள் ஏ. கே. குமாரவேல், ஏ. இராதாகிருட்டிணன், போ. இரா. செயராமன், எஸ். ஏ கைலாசன் ஆகியோர் பொற்பொழிவாற்றினர்.

முகவூர்

4—5—55 மாலை 6 மணிக்கு, தி. மு. கழகச் சார்பில் விழா நடைபெற்றது. அண்ணா படிப்பகத்திலிருந்து ஊர்வலம் புறப்பட்டுச் சுற்றிவந்து பொன் விழா மைதானம் சேர்ந்தது. அங்கு நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் மதுரை தோழர் எஸ். முத்து தலைமை தாங்கி மே தின விழா குறித்து விளக்கினர். பின்னர் புளியங்குடி தோழர் சேதுராஜ் அவர்கள் பேசுகையில் காங்கிரஸ் நடைமுறை கேலிக்குரியது என்று குறிப்பிட்டார். அடுத்து தோழர் சி. பி. சிற்றரசு அவர்கள் மே தின விழாவைக் கழகம் கொண்டாடுவது பற்றியும், தற்கால அரசியல் நிலை குறித்தும் சொற்பொழிவாற்றினர்.

தூத்துக்குடி ஸ்பின்னிங் மில் தொழிலாளர் சங்கத் தேர்தல்

30—4—55 மாலை 4 மணியளவில், மேற்படி சங்கத்தின் புத்தாண்டு (1955—56) நிர்வாகிகள் தேர்தல் நடைபெற்றது. தேர்தலில் சுமார் 300-க்கு மேற்பட்ட தொழிலாளர்கள் கலந்துகொண்டனர் தலைவர்: கே. வி. கே. சாமி; துணைத் தலைவர்கள்: இராமசாமி, ஏ. காசி; செயலாளர்: கே. தானமுத்து; துணைச் செயலாளர்கள்: ரோ செல்லப்பா, இளையபெருமான்; செயற்குழு உறுப்பினர்கள்: சுந்தரபாண்டி; புஸ்பம், அமிர்தம், க. அருணசலம், சித்திரவேல், மல்கீஸ், கன்னியம்மாள், வள்ளியம்மாள், கே. கோபால், எஸ் எஸ் லிங்கம், கோவில் பிள்ளை, செபமாலை, தங்கவேல், முத்துக்கருப்பண்ணன், வைகுண்டம், அருணாசலம்.

* * *

புதிய கட்டிடத் திறப்பு விழா

1—5—55 காலை, சங்க மாளிகையான சொந்தக் கட்டிடத் திறப்பு விழா தோழர் எம். எஸ் சிவசாமி தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் பலர் சொற்பொழிவாற்றினர்.

செய்திச் சுருள்

★

சபாநாயகர் சிவசண்முகம் மாணவர் இல்லம்

மாணவர் சேர்த்தல்

"சென்னை நகர உயர்தரப் பள்ளிகளில் முதல் படிவம் முதல் ஆறும் படிவம் வரையும், தொழிற்பயிற்சியும் பெற விரும்பி சபாநாயகர் சிவசண்முகம் மாணவர் இல்லத்தில் சேர விரும்பும் மாணவர்கள், மே 31-க்குள், 'கவுரவ செயலாளர் சபாநாயகர் சிவசண்முகம் மாணவர் இல்லம், 15, கிரே கார்டன்ஸ் முதல் தெரு, இராயபுரம், சென்னை—13' என்ற முகவரிக்கு இரண்டணா தபால் பில்லையுடன் விண்ணப்பம் செய்து கொள்ள வேண்டும்," என்று இல்ல கவுரவ செயலாளர் அறிவிக்கிறார்.

சொற்பயிற்சி வகுப்பு துவக்க விழா

23—4—55 இரவு 10-30 மணி அளவில் பொள்ளாச்சி தி. மு. கழக அலுவலகத்தில், தோழர் பி. கே. முத்து, சொற்பயிற்சி வகுப்பிற்குத் தலைமை தாங்கி நடத்திவைத்தார். தோழர்கள் வெங்கடராசு, அலி, ராமசாமி, வெங்கிடாசலம், சண்முகசுந்தரம், சீனிவாசன், அ. ச. பாலு, கி. சேரமணி, கா. துரைக்கண்ணன், க. கண்ணன் ஆகியோர்கள் தி. மு. கழக இலட்சியங்கள் என்பதைப் பற்றிப் பேசினார்கள்.

* * *

7—5—55 இரவு 10 மணிக்கு, பொள்ளாச்சி தி. மு. கழக அலுவலகத்தில், தோழர்கள் பி. என். இராமானுசம், க. துரைக்கண்ணன் ஆகியோர் முன்னிலையில் சொற்பயிற்சி வகுப்பு நடைபெற்றது. 'மதம் அவசியமா?' 'நாடு பிரிந்தால் வாழுமா?' என்ற தலைப்புகளில் பல தோழர்கள் பேசினர்.

வடக்களூர் பகுதி ஊராட்சி மன்ற தலைவர்கள் ஆலோசனைக் கூட்டம்

பெ. வ. கிழுமத்தூரில், 29-4-55 மாலை 5 மணிக்கு, தோழர் பி. நடேசன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற மேற்படி கூட்டத்தில், அப்பகுதியின் முன்னேற்றத்திற்கான பாதை வசதி, உழவர்கள் பம்பு செட்டுகள் வைத்துக் கொள்ளத் தேவையான மின்சார வசதி முதலியனவும், புதிதாகத் துவக்கப்பட்ட ஊராட்சி மன்றங்களுக்குக் கொடுக்க வேண்டிய 'லாண்டு செஸ்' தொகையையும் உடனடியாகக் கொடுக்க வேண்டுமெனவும், அந்தப் பகுதியை உடனடியாகத் தேசிய விஸ்தரிப்புத் திட்டத்தில் சேர்த்துக்கொள்ள வேண்டுமென சர்க்காரைக் கேட்டுக்கொண்டும், அந்தப் பகுதியைச் சேர்ந்த ஊராட்சி மன்றத் தலைவர்களனைவரும் அந்தந்தகிராமங்களின் முன்னேற்றத்திற்குப் பாடுபட வேண்டுமென கேட்டுக்கொண்டும் தீர்மானிக்கப்பட்டது.

சென்னை முத்தமிழ்மன்றம்

1—5—55 காலை 10 மணியளவில், சென்னை, சாலை விநாயகர் கோவில் தெரு, மேற்படி மன்றப் பொதுக் குழுக் கூட்டம், தோழர் முத்தமிழ்மணி தலைமையில் நடைபெற்றபோது, இவ்வாண்டு புதிய மன்ற நிர்வாகக் குழுவினர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். கௌரவத் தலைவர்: கா. அப்பாதுரை; துணைத் தலைவர்: எஸ். மாரியப்பன்; செயலாளர்: கா. மு. சீனிவாசன்; துணைச் செயலாளர்: மு. மனோகரன்; பொருளாளர்: கா பி இராதாகிருட்டிணன்; நூல் நிலையக் காப்பாளர்: டி. கோவிந்தன்; கணக்குத் தணிக்கையாளர்: எஸ். எஸ். துரைசாமி; செயற் குழு உறுப்பினர்கள்: எஸ். இ. எம். தம்பி, என். இராமதாஸ், ஆ. ருக்குமாங்கதன், ச. ப. உத்தமன், த. து இளஞ்சேரன்.

விவசாயிகள் கோரிக்கை

திருப்பத்தூர் சப்-கலெக்டரிடம் முறையீடு

திருப்பத்தூர் சப்-கலெக்டர் திருமதி ஏ. ஆர். ஜியார்ஜ் அவர்களிடம் வாணியம்பாடி விவசாய சங்கக் காரியதரிசி தோழர் வி. என். நந்தப்பன் தலைமையில் விவசாயிகள் குழு ஒன்று தூது சென்று, தற்போது புறம்போக்கு நிலத்தில் பயிரிட்ட விவசாயிகட்கு ஏகர் ஒன்றுக்கு ரூ 100, 90, 50, 10 வீதம் அபராதம் போட்டிருப்பது நியாயமல்ல என்றும், எனவே அபராதத்தை தள்ளுபடி செய்யவேண்டுமென்றும் கோரிக்கொண்டு மகஜர் ஒன்று கொடுத்துள்ளனர். (ந-தி)

தென்பகுதி இரயில்வேமென் யூனியன்

1—5—55 மாலை 5 மணியளவில், தோழர் ச. வாசுதேவன் தலைமையில் நடைபெற்ற மேற்படி யூனியனின் செங்கற்பட்டுக் கிளையின் பொதுக் குழுக் கூட்டத்தில், தோழர் சீ. இராகவானந்தம் மே தினத்தைப் பற்றியும், யூனியனின் திட்டங்களைப் பற்றியும் விரிவாகப் பேசிய பின்னர், ஆண்டறிக்கை வாசிக்கப்பட்டு, கடந்த ஆண்டு வரவு-செலவு கணக்கு பரிசீலிக்கப்பட்டது. பின்னர், இவ்வாண்டு புதிய நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தலைவர்: இராமச்சந்திரன்; செயலாளர்: ஜோசப்; மத்திய சங்க உறுப்பினர்: எஸ். நடராசன்; பொருளாளர்: ஏ. நடேசன்.

கோவை மளிகை வியாபாரிகள் சங்கம்

26—4—55-ல் மேற்படி சங்க நிர்வாகிகள் கூட்டம் தோழர் ஜி. ஆர். குப்தா தலைமையில் நடைபெற்றபோது, மே திங்களில், சங்க ஆண்டு விழாவை நடத்துவதென்றும், விழாவிற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய, தோழர்கள் சி. ஜி. சுப்பையா, சி. ஐயேர்சந்த் சேட், என். முத்துசாமி, வி. ஆர். குப்புசாமி, ஏ. சென்னை ஆகியோரை 'கன்வீனர்'களாக நியமித்தும்: தமிழ் நாடு வியாபார கழகத்தவருடன் தொடர்பு ஏற்படுத்திக் கொள்ளவும், திருக்கோவிலூரில் வியாபார சமூகத்தினர் கோரிய ஒருமுனை விற்பனை வரி கோரிக்கையை நிராகரித்த முதலமைச்சர் போக்கை ஆட்சேபித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

பாரதிதாசன் பிறந்த நாள் விழா

30—4—55ல், வடசென்னை குறள் நெறிக் கழக அறையில் தோழர் வே. சிவப்பிரகாசம் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், தோழர்கள் இரா. பாலு, இளஞ்சேரன், வளவன், மு. பொ. வீரன், இராமையா, சோழன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். இறுதியில், கவிஞர் பாரதிதாசன் அவர்களைப் பாராட்டி தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது.

மதுரை தியாகராயர் படிப்பகம்

1—5—55ல், மேற்படி படிப்பக உறுப்பினர் கூட்டம், தோழர் ச. காளியப்பன் தலைமையில் நடைபெற்றபோது, படிப்பக வரவு—செலவு கணக்குகள் சரி பார்த்து, ஒப்புக்கொள்ளப்பட்டதுடன் படிப்பகச் சார்பில் சொற்பயிற்சி மன்றம் ஒன்று நிறுவுவதெனவும் தீர்மானிக்கப்பட்டது. மே தின விழாவை முன்னிட்டு, அன்று காலை 10-30 மணிக்கு, படிப்பகத்தில், தோழர் இராமையா அவர்களால் கழகக் கொடியேற்றி வைக்கப்பட்டது.

காங்கிரசில் ஜாதிப் பித்தும் வகுப்புவாதமும் மலிந்துவிட்டன!

அதன் வளர்ச்சிக்கு தலைவர்களே காரணம்!

காங்கிரஸ் அதிபர் தேபரின் வருத்தமும் விளக்கமும்

பெர்காம்பூர், மே 9—

"அடுத்து வரும் பொதுத் தேர்தலில் காங்கிரஸ் அபேட்சகர்களைப் பொறுக்கி எடுக்கும் விதிமுறைகளை சீக்கிரமே காங்கிரஸ் தலைமைப்பீடம் வகுக்கும்," என்று காங்கிரஸ் அதிபர் தேபர், அகில இந்திய காங்கிரஸ் குழுவின் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

தேர்தலில் போட்டியிட காங்கிரஸ்காரர்கள் கையாளும் இழி செயல்களை அவர் கண்டித்தார்.

"நடத்தையில் சந்தேகம் உள்ள எந்த நபரின் பெயரையும் காங்கிரஸ் பார்லிமெண்டரி போர்டு ஏற்றுக்கொள்ளாது; இப்போது சட்டசபையில் உறுப்பினராக இருக்கும் நபர்கள், தங்கள் தொகுதியுடன் தொடர்பு கொள்ளாமல் நடந்து கொள்வார்களானால் அவர்களை மீண்டும் அபேட்சகர்களாகத் தேர்ந்தெடுக்கமாட்டோம்; தனது தொகுதியில் போதுமான ஊழியம் செய்யாத நபரும் அபேட்சகராகத் தேர்ந்தெடுக்கப்படமாட்டார்," என்று தேபர் குறிப்பிட்டார்.

காங்கிரசில் பணியாற்றும் தோழர்களிடம் மனத் தூய்மை வேண்டுமென்றும், காங்கிரசுக்குள் பிளவு சக்தி, கோஷ்டிகள் ஜாதிப் பித்து வகுப்புவாதம் ஆகிய தீயச் சக்திகள் மலிந்து கிடக்கின்றனவென்றும், அவைகளைப் போக்குவதுதான் தனது பணி என்றும் தேபர் குறிப்பிட்டு, 'இது போன்ற தீய சக்திகளுக்கு தலைவர்களே 50 சத வீதத்திற்கு மேல் பொறுப்பாளியாவார்கள்', என்றார்.

"ஒவ்வொரு காங்கிரசாரும் ஏதாவது ஒரு குழுவுடன் சேர்ந்துகொள்ள வேண்டியிருக்கிறது; நல்ல உள்ளம் கொண்ட காங்கிரஸ்காரர்கள் இந்தக் குழுக்களினின்றும் ஒதுங்கி நின்று, ஏதும் செய்ய முடியாமல் வருந்துகின்றனர்," என்று தேபர் குறிப்பிட்டார்.

"காங்கிரசில் புதிதாகச் சேர்பவர்கள் கோஷ்டி மனப்பான்மை கொண்டவர்களிடம்தான் தங்களுக்குத் தேவையான அறிவுரையைப் பெறவேண்டியிருக்கிறது: இதனால் நிலைமை மிகவும் மோசமாகிறது; வகுப்புவாதமும், ஜாதிப் பித்தும், தலையெடுத்து மேலோங்கி நிற்கிறது; தேர்தல் வரும்போது இந்தத் தீய சக்திகளுக்கு ஒரு நல்ல சந்தர்ப்பம் கிடைக்கிறது: ஆகவே, வகுப்புவாதம், ஜாதிப் பித்து போன்ற தீமைகளைக் களைந்தெறிந்து காங்கிரசை ஒழுங்குபடுத்தி பலப்படுத்தத் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்," என்று தேபர் கூறினார்.

'காங்கிரஸ் அமைப்பில் ஏதாவது ஒரு பதவியில் இருந்தால்தான் தங்கள் சொல்லுக்கு மதிப்பு இருக்கும்,' என்று பலர் நினைத்து, பிரதிநிதிகள் தேர்தலில் காங்கிரஸ்காரர்கள் பலர் போட்டியிட்டிருக்கிறார்கள்; கட்சியில் பதவியிலிருந்தாலும் இல்லாவிட்டாலும் நல்ல ஊழியர்களுக்கு எப்போதும் மதிப்பு இருக்கும்," என்று தேபர் குறிப்பிட்டார்.

அமிர்தசரஸ் ஆலைத் தொழிலாளர் வேலைநிறுத்தம்!

துணி உற்பத்தியாளர் சங்க அறிவிப்பு

அமிர்தசரஸ், மே 10—

"மே 12-ந் தேதிக்குள் வேலைக்குத் திரும்பிவிடுகிற தொழிலாளர் மீது எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படமாட்டாது; பலாத்காரத்தில் ஈடுபட்ட தொழிலாளர்கள் கூட பழி வாங்கப்படமாட்டார்கள் என உறுதியளிக்கிறோம்,"

என்று, துணி உற்பத்தியாளர் சங்கம் அறிவித்திருக்கிறது.

இங்கு சுமார் பத்தாயிரம் தொழிலாளர்கள், கடந்த ஏப். 11-ந் தேதி முதல் பொது வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கின்றனர்.

வேலையிலிருந்து நீக்கப்பட்ட சுமார் 500 தொழிலாளர்களை மீண்டும் வேலைக்கு எடுத்துக் கொள்ள வேண்டுமெனக் கோரி ஆலை ஒன்றின்முன், நகர நீதிபதி விதித்திருந்த தடையையும் மீறி, ஆர்ப்பாட்டம் செய்தபோது தொழிலாளர்களுக்கும் போலீசாருக்குமிடையே ஏற்பட்ட கைகலப்பின் விளைவே இந்தப் பொது வேலை நிறுத்தம் என்று கூறப்படுகிறது.

பாராளுமன்றத்தின் முன்பு ஆர்ப்பாட்டம்

கான்பூர் தொழிலாளர் துயர் துடைக்கக் கோரிக்கை

கான்பூரில் நடைபெறும் ஆலைத் தொழிலாளர் வேலை நிறுத்தத்தை ஆதரிக்கும் முறையில் புது டில்லி ஆலைத் தொழிலாளர்கள் 500 பேர் இந்தியப் பாராளுமன்ற கட்டிடத்தின் முன்பு ஆர்ப்பாட்டம் செய்தனர்.

இந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் முன்னர் நகரில் ஊர்வலமாகச் சென்றனர்.

செங்கொடிகளுடன் ஊர்வலம் சென்ற இவர்கள் கான்பூர் தொழிலாளர் துயரைத் தீர்க்க வேண்டுமென்றும், மத்திய சர்க்கார் இப்பிரச்சினையில் தலையிட வேண்டுமென்றும் கோரினார்கள்.

* * *

ஏ. கே. கோபாலன் கோரிக்கை

பம்பாய், மே 10—

"கான்பூர், அமிர்தசரஸ் ஆகிய இடங்களில் ஆலைத் தொழிலாளர்கள், ஆலைகளில் அமுல் செய்யப்படுகிற சிக்கனச் சீரமைப்பு முறையை எதிர்த்து போராடிக் கொண்டிருக்கின்றனர்; அதை ஒட்டி எழுந்துள்ள தகராறுகளைத் தீர்ப்பதற்கு பண்டித நேரு தலையிட வேண்டும்," என்று, கம்யூனிஸ்டு தலைவர் ஏ. கே. கோபாலன் கோரிக்கை விடுத்துள்ளார்.

மத்திய அரசாங்கம் இந்தப் பிரச்சினையை அலட்சியம் செய்தால், நாடு முழுவதிலும் ஆபத்தான தொந்தரவுகள் ஏற்படும் என்றும் அவர் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் எச்சரித்திருப்பதாகத் தெரிகிறது.

கைத்தறி நெசவாளர் உள்ளிருப்பு வேலைநிறுத்தம்!

சென்னை கைநெசவு தொழிற்சாலையில் சம்பவம்

சென்னை மாநில கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்க பேசின் பிரிட்ஜ் தொழிலாளர் சங்க உபதலைவர் திரு. வஜபதி, தாம் விடுத்துள்ள ஒரு அறிக்கையில் கூறுவதாவது:—

"சென்னை மாநில கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தைச் சேர்ந்த பேசின் பிரிட்ஜ் தொழிற்சாலையில் வேலைசெய்யும் 32 ஆண் நெசவாளர்களும், 13 பெண் தொழிலாளர்களும் இம்மாதம் 3-ந் தேதி முதல் உள்ளிருப்பு வேலை நிறுத்தம் செய்து வருகின்றனர்.

மாதிரி நெசவுச்சாலையாக நடத்தப்படும் இந்தத் தொழிற்சாலையில், பெடல், பிரேம் தறிகளின் மூலம் முதல்தரமான புது ரகத் துணிகளை நெசவாளர் உற்பத்தி செய்து தருகின்றனர்.

அவ்வாறு சிறந்த ரகங்களை உற்பத்தி செய்துதரும் இந்தத் தொழிலாளருக்கு மிகவும் குறைந்த கூலி தரப்படுகிறது. சென்ற ஆண்டின கைத்தறித் துணி நன்றாக விற்பனை ஆகியிருந்துங்கூட, இரண்டாண்டுகளுக்கு முன்பு குறைந்த கூலியை மீண்டும் உயர்த்தித்தர மறுக்கிறது.

நிர்வாகம், நெசவுத் தொழிலின் கூட்டுறவுச் சங்க அலுவல குமாஸ்தாக்களுக்கும், இதர பெரிய உத்தியோகஸ்தர்களுக்கும் லீவ் வசதி சம்பள உயர்வு, போனஸ், பிராவிடன்ட் நிதி போன்ற சலுகைகளை அளிக்கிறது: மேற்கண்ட சலுகைகளை, பட்டினி வாழ்க்கை நடத்தும் நெசவாளருக்குத் தர மறுத்து, பிடிவாதம் செய்கின்றது. இவற்றைப் பெறுவதற்காக அரசாங்க சமரச அதிகாரிக்கு விண்ணப்பித்து விசாரணை நடத்த ஏற்பாடு செய்யப்பட்டது. விசாரணையின்போது எதையும் ஒப்புக்கொள்ள மறுத்துவிட்டதுமல்லாமல், நிர்வாகம், நெசவாளரைப் பழிவாங்க முற்பட்டுள்ளது. அநியாயமாக ஒழுங்கு நடவடிக்கைகளும், ஆட்குறைப்பும் அமுல் செய்ய ஆரம்பித்துள்ளது. இந்த அநீதியை எதிர்த்து நெசவாளர் சென்ற ஒரு வாரமாக நடத்திவரும் போராட்டத்திற்கு ஆதரவு தருமாறு பொது மக்களை கேட்டுக் கொள்ளுகிறோம். அரசாங்க அதிகாரிகளும், கூட்டுறவு இயக்க தலைமை அதிகாரிகளும் உடனடியாகத் தலையிட்டு இந்த தகராறை விசாரித்து நீதி வழங்கக் கோருகிறோம்."

சிறையிலிருந்தே தேர்தலில் ஈடுபாடு!

(அயர்லாந்து), மே 8—

மே 26-ந் தேதியன்று நடைபெறவிருக்கும் பிரிட்டிஷ் பொதுத் தேர்தலில் 10 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டு தண்டனை அனுபவித்துவரும் ஒருவர் அபேட்சகராக நிற்கவிருக்கிறார்.

பிரிட்டிஷ் இராணுவக் கூடாரத்தின் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் பங்கு பெற்றிருந்தார் என்பதற்காக, பிலிப் கிளார்க் என்பவர் 10 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டவர்.

அவரை பெர்மனு தென் டைரோன் மதாகுதிக்கு அபேட்சகராய் நிறுத்துவதென, 'பிரிவினை எதிர்ப்புக் கட்சி' மாநாடு ஒன்றில் முடிவு செய்யப்பட்டிருப்பதாகத் தெரிய வருகிறது.

தி. மு. க. பொதுச்செயலாளர்

இரா. நெடுஞ்செழியன் மதுரை வருகை

வரவேற்பு—பாராட்டுக் கூட்டம்

15—5—55 மாலை 6 மணிக்கு, மதுரை, கீழச்சந்தைப் பேட்டை வைகையாற்றில், பாராட்டுக் கூட்டம் நடைபெறும்.

தோழர்கள் ஏ. கோவிந்தசாமி எம். எல். ஏ., காஞ்சி— கல்யாணசுந்தரம், ஏ.வி.பி. ஆசைத்தம்பி, ஏ. வி. சௌந்திரராசன், எஸ். முத்து ஆகியோர் பொதுச் செயலாளரைப் பாராட்டிப் பேசுவர்.

காலை 9 மணிக்கு புகைவண்டி நிலையத்தில் வரவேற்பு.

மாலை 4 மணிக்கு திடீர்நகரிலிருந்து ஊர்வலம்.

* * *

அன்று காலை 10 மணிக்கு அழகரடி வேலாயுத நினைவுப் படிப்பக ஆண்டு விழாவிலும், மாலை 5-30 மணிக்கு கீழச் சந்தைப்பேட்டை அண்ணாதுரை இலவசப் படிப்பக ஆண்டு விழாவிலும் பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் பங்குகொள்வார்.

தி. மு. க. பொதுச்செயலாளர்

இரா. நெடுஞ்செழியன் சிவகங்கை வருகை

14-5-55 காலை 9½ மணிக்கு, பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களுக்கு சிவகங்கை புகைவண்டி நிலையத்தில் வரவேற்பும், மாலை 7 மணிக்கு, 'இராமச்சந்திரன் நினைவுப் பூங்கா' முன்னர், தோழர் மணவாளன் தலைமையில் பொதுக்கூட்டமும் நடைபெறும்.

சென்னை தி. மு. கழக கிளை செயலாளர்கட்கு

"இராயபுரம் 'அறிவக'த்தில் உள்ள சென்னை மாவட்டக் கழக அலுவலகம் பிரதி தினமும் மாலை 3-மணியிலிருந்து இரவு 8-மணி வரை திறந்து வைக்கப்படும். கிளைக் கழக சம்பந்தமாக மாவட்டச் செயலாளரை காண விரும்புவோர் குறித்த நேரத்தில் வந்து சந்தித்துக்கொள்ள வேண்டுகிறேன்,"

என்று, சென்னை மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் தோழர் இளம்பரிதி அறிவிக்கிறார்.

நேட்டால் மாணவர்கள்......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆப்பிரிக்கர்களுக்காக உள்ள கெத்வாலனி தொழில் அனுபவக் கல்லூரியைச் சேர்ந்தவர்களாம் அந்த மாணவர்கள்.

மாதா கோவில் பூஜையையும், 'பைபிள்' பாட போதனையையும் எதிர்த்து அந்த மாணவர்களிடையில் 'பொதுவான புரட்சி' தோன்றியிருந்ததாகக் கல்லூரி அதிகாரிகள் கூறியுள்ளனர்.

தென் நேட்டாலில் உள்ள அந்தக் கல்லூரி ஒரு அமெரிக்கக் கிருஸ்து மிஷனால் நடத்தப்படுகிறதாம்.

மாணவர்களிடம் கம்யூனிஸ்டு புத்தகங்கள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டு 35 மாணவர்கள் கல்லூரியிலிருந்து வெளியேற்றப்பட்டதின் விளைவாகவே இந்த ஆர்ப்பாட்டமும், வேலை நிறுத்தமும் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

அறிவிப்பு

'நம் நாடு' தின இதழில் வெளியிடும் செய்திகளை ஆசிரியர் முகவரிக்கும், 'நம் நாடு' இதழுக்கு நன்கொடை, ஏஜண்டு டிபாசிட் தொகை-பில் பாக்கித் தொகை, சந்தாவுக்காக அனுப்பப்படும் செக், ட்ராப்டு, போஸ்டல் ஆர்டர், மணியார்டர் ஆகியவைகளை "பொறுப்பாளர் (மானேஜர்), 'நம் நாடு'" என்ற முகவரிக்கும் எழுதி அனுப்ப வேண்டுகின்றோம். தனிப்பட்டவர்கள் பெயர்களைக் குறிப்பிட்டு செக், ட்ராப்டு, மணியார்டர் ஆகியவைகளை அனுப்பாதிருக்க வேண்டுகின்றோம்.

தி. மு. க. தலைமைக் கழகத்திற்கு அனுப்பி வைக்கும் கடிதங்கள், மணியார்டர் முதலியவைகளை பொதுச்செயலாளர் முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டுகின்றோம்.

'நம் நாடு',
பொறுப்பாளர்

****** ***********

கழகக் கூட்டங்கள்

☆

பாண்டமங்கலம்

திரு. சோமசுந்தரம் திடலில்
12—5—55 மாலை 6 மணிக்கு
பேசுபவர்:
அருண்மொழி

அன்று இரவு 10 மணிக்கு, செங்குட்டுவன் நாடக மன்றத்தினரால் 'போர்வாள்'—நாடகம், தோழர் ஏ. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறும்.

☆

திருத்தங்கல்

பாண்டியன் பூங்காவில்
12—5—55 இரவு 9 மணிக்கு
தலைவர்:
எஸ். வி. செண்பகமூர்த்தி
பேசுவோர்:
கே. வி. கே. சாமி
எம். காளியப்பன்

☆

சென்னை

11—5—55 மாலை 6 மணிக்கு, சென்னை 5-வது வட்ட தி. மு. கழக இல்லில், தோழர் உருக்குமாங்கதன் தலைமையில், 'வதந்தி' எனும் பொருள் பற்றி தோழர்கள் பலர் பேசுவர்.

திருக்குறள் மாநாடு

மே 14, 15 தேதிகளில், பெங்களூர் டாஸ்கர் டவுன் (பிளாக்பள்ளி மைதானம்) உயர்நிலைப் பள்ளித் திடலில் மாபெரும் பந்தலில் நடைபெறும். பிரமுகர்கள் பலர் பேசுவர். தோழர் என். எஸ். கிருஷ்ணன் குழுவினரால் வில்லுப்பாட்டு நிகழ்ச்சியும், நாடகமும் நடைபெறும். இசை நிகழ்ச்சிகளும், திருக்குறள் கண்காட்சியும் உண்டு. பாலு சகோதரர்களின் குறள் ஓவியங்கள் கண்காட்சியில் இடம் பெறும்.

திருமணம்

12—5—55 காலை 7½ மணிக்கு, சென்னை, சேத்துப்பட்டு, மங்களபுரம் 3-வது தெரு, 23-ம் எண்ணுள்ள இல்லத்தில், தோழர் ஏ. எம். கிருட்டிணன்—தோழியர் ஆர். காமாட்சி திருமணம், தோழர் முகிலவண்ணன் தலைமையில் நடைபெறும். தோழர்கள் இளம்பரிதி, ஆர். டி. அரசு ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (21, குரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன், எம். ஏ.